# 06-01-2025 செய்தி

## சிபில் ரிசர்வ் வங்கியின் புதிய விதிகள் அமல்

**சிபில்**

- இந்தியாவில் உள்ள அனைத்து வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள், வாடிக்கையாளருக்கு தனி நபர் கடன், வீட்டுக் கடன். வாகனக் கடன் வழங்குவதற்கு ஒரு முக்கிய காரணியாக 'சிபில்' (Credit Information Bureau (India Limited) மதிப்பெண்ணை கணக்கில் எடுத்துக் கொள்கின்றன.
- சிபில் மதிப்பெண் 300 முதல் 900 வரை வழங்கப்படும். இதில் 750-க்கு மேல் இருந்தால் வாடிக்கையாளர் கேட்டபடி கடன் கிடைக்கும். 650 முதல் 749 வரை இருந்தால் கடன் கிடைக்கும். ஆனால் கூடுதல் வட்டி விதிக்க வாய்ப்பு உள்ளது. 550 முதல் 649 வரை இருந்தால் கடன் கிடைப்பதற்கான வாய்ப்பு குறைவு.

**கார்த்தி சிதம்பரம்**

- இந்நிலையில், நாடாளுமன்ற மக்களவையில் தமிழக காங்கிரஸ் உறுப்பினர் கார்த்தி சிதம்பரம் சமீபத்தில் பேசும்போது, "சிபில் மதிப்பெண்ணை வழங்கும் அமைப்புகள் தனியார் நிறுவனங்களால் கட்டுப்படுத்தப்படுகின்றன.
- இந்த மதிப்பெண்ணை கணக்கிடுவதில் வெளிப்படைத் தன்மை இல்லை. நம்முடைய முந்தைய கடன்கள் பற்றிய விவரங்களை முறையாக பராமரிக்கிறார்களா என்பதே சந்தேகமாக உள்ளது.
- இந்த நிறுவனங்களை சரியாக கட்டுப்படுத்த அரசு தவறிவிட்டது. சிபில் மதிப்பெண் குறைவாக இருக்கிறது எனக் கூறி கடன் மறுக்கும்போது, மேல்முறையீடு செய்ய வழியே இல்லை. இந்த அமைப்புக்கு கடிவாளம் போட வேண்டும் என்றார்.
- ஒரு நபரின் கடன் வரலாறு மற்றும் திருப்பிச் செலுத்தும் நடத்தை ஆகியவற்றின் அடிப்படையில் சிபில் மதிப்பெண் கணக்கிடப்படுகிறது, இது வங்கிகள் மற்றும் பிற கடன் வழங்குநர்களால் டிரான்ஸ்யூனியன் சிபில் நிறுவனத்துக்கு தெரிவிக்கப்படுகிறது.
- சிபில் மதிப்பெண்ணைக் கணக்கிடும்போது கருத்தில் கொள்ளப்படும் சில காரணிகள் வருமாறு: **கடன் திருப்பிச் செலுத்திய வரலாறு:** இந்த காரணி மதிப்பெண்ணில் 35% பங்களிக்கிறது.
- முந்தைய கடன்களை சரியானபடி திருப்பிச் செலுத்தினாரா என்றும் கடன் திருப்பி செலுத்துவதில் கால தாமதம் உண்டா என்பதையும் ஏதாவது கடன் தள்ளுபடி செய்யபட்டுள்ளதா என்பதை பொறுத்தும் இந்த மதிப்பெண் அமையும்.
- **கடன் பயன்பாடு;** இந்த காரணி மதிப்பெண்ணில் 30% பங்களிக்கிறது. ஒரு நபர் பயன்படுத்திய கடனின் அளவை, அவருக்குக் கிடைக்கும் மொத்தக்கடன் தொகையுடன் ஒப்பிடுவதன் மூலம் இது கணக்கிடப்படுகிறது.
- அதிக கடன் பயன்பாட்டு விகிதம் ஒரு நபர் கடனைச் சார்ந்திருப்பதைக் குறிக்கலாம் மற்றும் அவரது கடனை சரியான நேரத்தில் செலுத்த முடியாமல் போகலாம். இதனால் மதிப்பெண் குறையலாம்.
- **கடன் விசாரணைகள்:** ஒரு நபர் கடன் பெறுவதற்காக பல்வேறு நிதி நிறுவனங்களை குறுகிய காலத்தில் அணுகினால் அந்த நபரின் மதிப்பெண் குறையும்.

**பிரச்சினை எங்கே வருகிறது?**

- சில நேரங்களில் இதில் பங்கு பெறும் வங்கிகளும் மற்ற நிதி நிறுவனங்களும் சரியான நேரத்தில் தரவுகளை அளிக்காமல் போவதால் சிபில் மதிப்பெண் குறைகிறது. கடன் விண்ணப்பித்தவர்களுக்கு எதன் அடிப்படையில் மதிப்பெண் கணக்கிடப்படுகிறது என்பது புரியாததாலும் குழப்பம் உண்டாகுகிறது.

**15 நாட்களுக்கு ஒரு முறை..**

- இந்நிலையில், சிபில் தொடர்பான ரிசர்வ் வங்கியின் புதிய விதிகள் ஜனவரி 1 முதல் அமலுக்கு வந்துள்ளது. இதன்படி, வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் தங்கள் வாடிக்கையாளர்களின் கடன் மதிப்பெண்னை 15 நாட்களுக்கு ஒரு முறை (மாதத்தின் 15 ஆம் தேதியிலும், கடைசி தேதியிலும்), கட்டாயம் புதுப்பிக்க வேண்டும். இதை கடன் தகவல் நிறுவனங்களுக்கும் அனுப்ப வேண்டும்.
- வாடிக்கையாளர்களின் கடன் அறிக்கையை வங்கிகளும் அல்லது வங்கி அல்லாத நிதி நிறுவனங்களும் பார்க்கும் ஒவ்வொரு முறையும். வாடிக்கையாளருக்கு அதுபற்றி மின்னஞ்சலிலோ அல்லது எஸ் எம் எஸ் வழியாகவோ தெரிவிக்க வேண்டும்.
- இதுபோல, கடன் அல்லது கடன் அட்டை மறுக்கப்பட்டாலும் அதற்கான காரணத்தை வாடிக்கையாளர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

- கடன் தகவல் நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்கு ஆண்டுதோறும் கடன் அறிக்கையை இலவசமாக கட்டாயம் அனுப்ப வேண்டும். கடனை திருப்பிச் செலுத்தாத வாடிக்கையாளர் பற்றிய தகவலை பதிவிடுவதற்கு முன் அவருக்கு வங்கிகள் தகவல் தெரிவிக்க வேண்டும் மேலும் வாடிக்கையாளரகளின் குறைகளை தீர்க்க தனி அதிகாரியை நியமிக்க வேண்டும்.
- கடன் பற்றிய புள்ளிகளை வழங்கும் நிறுவனங்கள் 30 நாட்களுக்குள் புகார்களுக்கு தீர்வு காண வேண்டும் எனவும் ரிசர்வ் வங்கியின் புதிய விதிமுறையில் கூறப்பட்டுள்ளது.

## தனியார் மயமாகும் காட்டுயிர்ப் பாதுகாப்பு

- உலக அளவில் உயிர்ப்பன்மைக்கு எதிரான முக்கிய அச்சுறுத்தல்களில் ஒன்றாகக் காட்டுயிர்க் குற்றங்கள் அறியப்படுகின்றன. சட்டத்துக்குப் புறம்பான ஆயுதங்கள், போதைப் பொருள்கள், மனிதர்கள் கடத்தப்படுவது போன்ற குற்றங்களுக்கு அடுத்த இடத்தில் காட்டுயிர்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் குற்றங்களே இருக்கின்றன. அந்த வகையில் உயிர்ப்பன்மை அதிகம் கொண்ட நம் நாட்டின் காட்டுயிர்களும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றன.
- தமிழ்நாட்டின் மேற்கு – கிழக்கு மலைத் தொடர்ப் பகுதிகள், மன்னார் வளைகுடா கடல் பகுதி ஆகியவை அவ்வாறான பல்லுயிர் முக்கியத்துவம் பெற்ற பகுதிகள்.
- வனத் துறையில் அரசு ஊழியர்களாகப் பணியாற்றும் வனக் காவலர்கள்,உயர் வன அலுவலர்களால் மட்டுமே காட்டுயிர்க் குற்றங்களைத் தடுத்திட இயலாது.
- எனவே, காடு – கடல் சார்ந்த மரபறிவைக் கொண்ட பழங்குடி – கடலோடி இளைஞர்களே பெரும்பாலும் வேட்டைத் தடுப்புக் காவலர்களாக நியமிக்கப்பட்டு, நம் காட்டுயிர் வளங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.
- இந்நிலையில், தற்காலிகப் பணியில் இருக்கும் வேட்டைத் தடுப்புக் காவலர்களின் பணியைத் தனியார் வெளி முகமையின் மூலமாக நியமித்துக்கொள்ளத் தமிழ்நாடு வனத்துறை திட்டமிட்டுள்ளது.

**வேட்டைத் தடுப்புக் காவலர்களின் பணி**

- வேட்டைத் தடுப்புக் காவலர்கள் தற்காலிகப் பணியாளர்களாக இருந்தாலும், 10 வருடத் தொடர் பணியை நிறைவு செய்யும்பட்சத்தில், வனக்காவலராக நியமிக்கப்படுவார்கள்.
- ஒவ்வொரு நாளும் ஏறக்குறைய குறைந்தபட்சம் 10 முதல் 20 கி.மீ. தூரம் காட்டுப் பகுதிக்குள் கால்நடையாக ரோந்துப் பணி மேற்கொள்வதே இவர்களின் முதன்மைப் பணி. வனத்துக்குள் மனித நடமாட்டம் இருக்கிறதா,காட்டுயிர்கள் ஏதேனும் இறந்திருக்கின்றனவா, மரங்கள் வெட்டப்பட்டிருக்கின்றனவா என்பதைக் கண்காணிக்க வேண்டும்.
- மேலும், ரோந்தின்போது என்னென்ன விலங்குகளை அவர்கள் காண்கிறார்கள் என்பதைக் குறிப்பெடுத்து, அதற்கான பிரத்யேகச் செயலியில் பதிவேற்ற வேண்டும்.
- ரோந்துப் பணியைத் தவிர யானை, புலி, கரடி போன்ற காட்டுயிர்கள் ஊருக்குள் வராமல் தடுப்பது, அப்படியே வந்தாலும் வனத்துக்குள் திருப்பி அனுப்புவது, காட்டுயிர்களைக் கணக்கெடுப்பது, மழைக்காலத்தில் சாலைகளில் விழும் மரங்கள், பாறைகளை அகற்றுவது, களைச்செடிகளை அழிப்பது, கோடைக் காலத்தில் காட்டுத்தீ ஏற்படாமல் தடுப்பது காட்டுத்தீ ஏற்பட்டால் அதனை அணைத்துக் கட்டுப்படுத்துவது போன்ற பல்வேறு பணிகளையும் அவர்கள் மேற்கொள்கிறார்கள்.

**என்ன காரணம்?**

- பொதுவாகவே, தற்காலிகப் பணியில் இருக்கும் ஊழியர்கள், சில நிர்வாகக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி நீதிமன்றங்களை நாடி நிரந்தரப் பணியைப் பெற்றுவிடுகிறார்கள்.
- இது அரசுக்கு நிர்வாகச் சிக்கலை ஏற்படுத்துவதால், அதனைத் தவிர்க்கவே தற்காலிகப் பணிகளைத் தனியார் வெளிமுகமை வசம் ஒப்படைக்க வேண்டும் என முடிவெடுக்கப்பட்டுள்ளதாகச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.
- இது வேட்டைத் தடுப்புக் காவலர்களின் பணிப் பாதுகாப்பைக் கேள்விக்குள்ளாக்கும் ஒரு செயல் என்றே கருத வேண்டியிருக்கிறது. என்னதான் ஏற்கெனவே வேட்டைத் தடுப்புக் காவலர்களின் பணி மூப்புப் பட்டியலில் இருப்பவர்களுக்குப் பாதிப்பில்லை எனக் குறிப்பிட்டிருந்தாலும், அண்மையில் பணியில் சேர்ந்தவர்களின் பணிப பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லை.
- வனக்காவலராகவும், வனக் காப்பாளராகவும் நியமிக்கப்படுவதற்குக் குறைந்தபட்சக் கல்வித் தகுதியாக முறையே 10, 12ஆம் வகுப்பு என இருக்கும்பட்சத்தில், பழங்குடி இனத்தைச் சார்ந்த பலர் 8–9 ஆம் வகுப்போடு பள்ளிப் படிப்பை முடித்துக்கொள்வதால், 10வருடக்கால வேட்டைத் தடுப்புக் காவலர் பணி வனக் காவலராக, அதாவது அரசு ஊழியராக ஆகக்கூடிய வாய்ப்பை அவர்களுக்கு வழங்கியது. ஆனால், தனியார் வெளி முகமையை ஈடுபடுத்துவதால் இவ்வாய்ப்பு பறிக்கப்படும் ஆபத்து இருக்கிறது.

## நதிநீர் இணைப்பு : கவனம் தேவை

- யமுனை ஆற்றின் கிளை நதிகளான கென் நதியையும், பேட்வா நதியையும் இணைக்கும் கென் – பேட்வா நதிநீர் இணைப்புத் திட்டம் தொடங்கப்பட்டிருக்கும் நிலையில், நதிநீர் இணைப்புத் திட்டம் குறித்துத் தேசிய அளவிலான விவாதங்கள் தொடங்கியிருக்கின்றன.
- இந்தியாவின் நதிநீர் இணைப்புக் கொள்கையின்படி – தேசிய நதிநீர் இணைப்புத் திட்டத்தின்படி (என்.ஆர்.எஸ்.பி) உருவாக்கப்படும் முதல் திட்டம் என்பதால், கென் – பேட்வா நதிநீர் இணைப்புத் திட்டம் மிகுந்த கவனம் பெறுகிறது.
- மத்தியப் பிரதேசத்தில் பாயும் கென் நதியும், உத்தரப் பிரதேசத்தின் பேட்வா நதியும் இணைக்கப்படும் இந்தத் திட்டத்தை, மறைந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் நூற்றாண்டுத் தினத்தில் பிரதமர் மோடி தொடங்கிவைத்ததும் இதன் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.
- உத்தரப் பிரதேச – மத்தியப் பிரதேச மாநிலங்களில் பரவியிருக்கும் புந்தேல்கண்ட பிரதேசம் வறட்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இந்தப் பிராந்தியத்தின் தண்ணீர்ப் பற்றாக்குறைக்குத் தீர்வு காணவும், நீர்ப்பாசனம் மூலம் வேளாண்மையைப் பெருக்கவும், நீர் மின்சக்தி உற்பத்திக்கும் இத்திட்டம் உதவும் என நம்பப்படுகிறது.
- ரூ.44,000 கோடியில் உருவாக்கப்படும் இந்தத் திட்டத்தின்படி, இரண்டு நதிகளையும் இணைக்கும் வகையில் 230 கிலோமீட்டர் நீளத்துக்குக் கால்வாய் உருவாக்கப்படுகிறது.
- நதிநீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தடுக்கும் வகையில் நதிகளை இணைக்க வேண்டும் என்கிற கருத்து கிழக்கிந்திய கம்பெனியின் நீர்ப்பாசனப் பொறியாளர் சர் ஆர்தர் காட்டனால் 1858இல் முன்வைக்கப்பட்டது.
- வெவ்வேறு நதிகளை இணைக்க வேண்டும் என இந்தியாவின் பல தலைவர்கள் பல்வேறு தருணங்களில் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டங்கள் மூலம் நீர் மின்சக்தி தயாரிப்பது. நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவது எனப் பல்வேறு பலன்கள் கிடைக்கும்.
- நதிநீர்ப் பங்கீடு தொடர்பாக அண்டை மாநிலங்களுக்கு இடையே பிணக்குகள் தொடரும் நிலையில், இப்படியான திட்டங்கள் அவசியம் என்று கருதுபவர்களும் உண்டு.
- எனினும், நதிநீர் இணைப்பின்கீழ் கொண்டுவரப்படும் திட்டங்களால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படலாம் எனச் சூழலியல் ஆர்வலர்கள் தொடர்ந்து சுட்டிக்காட்டிவருவதைப் புறந்தள்ள முடியாது.
- இயற்கையாகப் பாயும் நதிகளின் போக்கில் குறுக்கிடுவது மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்றும், வெவ்வேறு இயல்புகளைக் கொண்ட நதிகள் இணைக்கப்படுவதால் நிறைய பாதிப்புகள் ஏற்படலாம் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.
- நதிநீர் வீணாகக் கடலில் கலக்கிறது என்கிற வாதமே அறிவியல் ஆதாரமற்றது என்று சூழலியலாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். கென் – பேட்வா நதிநீர் இணைப்புத் திட்டத்தால், பன்னா புலிகள் சரணாலயப் பகுதியில் வெள்ளம் ஏற்படலாம் எனக் குரல்கள் எழுந்திருப்பது குறிப்பிடத்தக்கது.
- அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளில் புதிய அணைக்கட்டுத் திட்டங்கள் உருவாக்கப்படுவதில்லை. பின்லாந்து உள்ளிட்ட பல நாடுகளில் ஏற்கெனவே கட்டப்பட்ட அணைக்கட்டுகள் செயலிழக்க வைக்கப்படுகின்றன.
- இப்படியான சூழலில் நதிநீர் இணைப்பு தொடர்பான விவாதங்கள் இந்தியாவில் அறிவியல்பூர்வமாகவும் ஆக்கபூர்வமாகவும் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியம் குறுகிய காலப் பலன்களை மட்டும் கருத்தில் கொள்ளாமல் நீண்டகாலப் பாதிப்புகள் குறித்தும் அரசு பரிசீலித்து உரிய முடிவுகளை எடுக்க வேண்டும்!



எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்

*- மகாகவி பாரதியார்*

வெற்றியின் முகவரி
Since 2006
ARISE AWAKE ACHIEVE
SURESH' IAS ACADEMY
(Right Choice for All Competitive Exams)